**ஜா-எல நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜா-எல நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒளிபோல் விளையாட்டரங்களாக நிர்மாணிப்பதற்காக 2017 சனவரி 26 ஆந் திகதி கிடைத்த ரூபா 500,000 தொகை, பெற வேண்டிய மூலதன உதவியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அப்பெறுமதியால் கடன்பட்டோர் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 38,975 தொகையான நானாவிதக் கடன்கொடுத்தோர் 2017 திசெம்பர் 31 இல் அட்டுறுவாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக 2018 சனவரி மாதத்தில் செலுத்தப்பட்ட ரூபா 334,500 தொகையான களஞ்சியக் கடன்கொடுத்தோர் 2017 திசெம்பர் 31 இல் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 8,360,081 தொகையான மின்சார மற்றும் பொதுக் களஞ்சியப் பொருட்கள், களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கில் பதியப்பட்டிருந்தமையை சரிசெய்வதற்காக பொதுக் களஞ்சியக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டில் களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கின் மூலம் விநியோகிக்கப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 7,716,980 தொகையான மின்சார மற்றும் பொதுக் களஞ்சிய பொருட்களை சரிசெய்து பொதுக்களஞ்சிய கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் வாகனங்களை விற்றுத்தீர்க்கும் ஏல விற்பனையின் போது டேலர் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கிரயமான ரூபா 285,000 தொகை மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) 04 செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மூலதன உதவிப் பணம் ரூபா 4,100,417 ஆக இருந்த போதிலும் ரூபா 3,690,300 தொகை மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டமையால் அக்கணக்கு ரூபா 410,118 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) உரிமை கோரப்படாத கடன்கொடுத்தோர் ரூபா 13,740,346 பெறுமதியில் கோரப்படாததாக உறுதிப்படுத்தப்படாத ரூபா 5,341,849 தொகை திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுக்கும், பதிவேடுகள் / பட்டோலைகளுக்குமிடையே 04 விடயங்களில் வேறுபாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,921,189 ஆகும்.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) ரூபா 241,295 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னர் கிடைத்த வருமானக் கணக்கின் ரூபா 200,479 செலவு மீதி இனங்கண்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

#### தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

பதிவேடுகள், பட்டோலை மற்றும் விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 37,645,626 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 84(1) | அனுமதியற்ற காணி மற்றும் கட்டிடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், கொழும்பு ஜா-எல அதிவேக வீதியின் நுழைவு வீதிக்குரிய 08 காணிக் கூறுகளை நீக்குதலோ அல்லது நிறுத்துதலோ செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய LGD/06/02/04 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதம் | கடை உரிமையாளர்களிடமிருந்து முற்பணம் பெற்று அமைக்கப்பட்ட கட்டிடங்களின் கடை உரித்தைக் கையளித்தல் மற்றும் உப வாடிக்கையாளர்களுக்கு கையளிப்பதற்கு புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்ற மாதாந்த வாடகையைப் போல் 60 மடங்கிற்கு குறையாத பெறுமதியொன்று அறவிடப்பட்டதன் பின்னர் 2018 மார்ச் 31 இற்கு முன் கையளிக்கும் இயலுமை காணப்பட்ட போதிலும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ள வேண்டிய மதிப்பீடு இடம்பெறாமையினால் 2018 மார்ச் 31 இற்கு முன்னர் உப வாடகையாளருக்கு கையளிப்பதற்கு முடியாதிருந்தமையால் சபைக்கு கணிசமான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,109,990 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,407,740 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 36,675 | 41,804 | 26,630 | 21,011 | 36,708 | 41,128 | 23,073 | 20,810 |
| வாடகை | 8,560 | 8,875 | 8,835 | - | 7,860 | 7,723 | 6,748 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 462 | 1,330 | 1,330 | - | 482 | 462 | 462 | - |
| ஏனைய வருமானம் | 64,369 | 28,626 | 28,626 | 172 | 41,023 | 17,137 | 17,137 | 4,396 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல், மதிப்பீட்டை விஞ்சி ரூபா 187.9 சதவீதம் அதிகரித்தமையால் மதிப்பீடு செய்தல் சாத்தியமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஏனைய வருமானத்தில் 44.5 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

வீடுகளை உடைத்து அகற்றும் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,464,475 ஆதனவரிப் பெறுமதி பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், ஆதனவரி அலகுகளை உடைத்து அகற்றப்பட்டமைக்கு கிராம உத்தியோகத்தரிடமிருந்து உறுதிப்படுத்தலொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

நகர அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவு செய்துள்ள தங்குமிடங்கள் மற்றும் விருந்தினர் விடுதிகளிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 394,839 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு மொத்தப் புரள்வில் 1 சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்று இனங்காணப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 வாடகை

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மீளக் கையேற்கப்பட்ட பொதுச் சந்தையின் 05 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

#### (அ) கழிவுப்பொருள் அகற்றும் கட்டணம்

விதிகள் விதிக்கப்படாமல் தனியார் நிறுவனங்களிலிருந்து கழிவுப்பொருள் அகற்றும் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

#### (ஆ) முத்திரைக் கட்டணம்

2014 ஆகஸ்ட் மாதம் முதல் 2017 திசெம்பர் மாதம் வரையான கால எல்லைக்குரிய முத்திரைக் கட்டண வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

(i) கோப்பைபந்து (பாஸ்கட் போல்) விளையாட்டரங்கிற்கு தூண்களை வழங்கி பொருத்துவதற்காக ரூபா 1,050,000 தொகையில் 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு 2016 திசெம்பர் 14 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கோப்பை பந்து விளையாட்டரங்கிற்கு முற்கலவைக் கல் பதிப்பதற்காக ரூபா 1,130,435 தொகையில் 2017 திசெம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 மே 31 ஆந் திகதி வரையிலும், அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மேல் மாகாண விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்து ரூபா 1,000,000 தொகையும் இதற்காக கிடைத்திருந்தது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கூட்டுப்பசளையாக்கல் மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியாத கழிவுப்பொருட்கள் சூதுவெல்ல கழிவுப்பொருள் தளத்தில் அகற்றும் போது மண் போடப்படாமையினால் அதிக துர்நாற்றத்துடன் காணப்பட்டமை மற்றும் ஈக்கள், நுளம்புகள் பெருகி அதிகரிப்பதால் சுற்றாடலுக்கு பாதகமான தாக்கமொன்று ஏற்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) 11 ஏக்கர் 01 றூட் 19.2 பேர்ச் அளவான நுககஹ வயற் காணி அளவை செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான ஆதனமாக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணியில் அனுமதியற்ற வீடுகள் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட போதும், அந்த அனுமதியற்ற வீடுகளை அகற்றுதல் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 நவம்பர் 20 ஆந் திகதிய டபிள்யூ/எல்பீடீ/15/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மாவட்ட செயலாளரின் 2016 யூன் 09 ஆந் திகதிய கம்/மா.செ/03/சனாதிபதி கூட்டம்/2016 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மேல் மாகாணத்தில் சகல வயற்காணிகளையும் தாழ்வு

நிலங்களையும் நிரப்புதல் தடைசெய்யப்பட்டு அதற்காக அனுமதி வழங்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கீழே குறிப்பிடப்படுகின்ற புறக்கணித்தல்கள் ஏற்பட்டிருந்தன.

(i) அதிவேக வீதியின் நுழைவு ஆரம்பத்தில் வலதுபக்கமாக அமைந்துள்ள காணி மண் நிரப்பப்பட்டு வாய்க்கால் வழிக்கு குறுக்காக முழுமையாக கொங்கிறீட் இடப்பட்டிருந்ததுடன் ஜா-எல கொழும்பு அதிவேக வீதிகளின் நுழைவிற்கு நேரடியாகத் தொடர்புபடுத்தப்பட்டன.

(ii) ஜா-எல - கலஎலிய சோவிஸ் மாவத்த விமான நிலைய வீதியை பெரிய கால்வாயுடன் தொடர்புபடும் வாய்க்கால் வீதிக்கு குறுக்காக வயல்காணியை மண்போட்டு நிரப்பி வாகனங்கள் பழுதுபார்க்கும் நிறுவனக் கட்டிடமொன்று நிர்மாணித்து அதனைச் சுற்றி மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டமையால் நீர் வடிந்து செல்வதற்கு போதியளவாக இல்லாமல் வாய்க்கால் வழி ஒடுங்கியிருந்தது. இது அனுமதியற்ற நிர்மாணமாக இருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் இந்த வியாபார நிலையத்திற்காக வியாபார அனுமதிப்பத்திரம் நகர சபையால் விநியோகிக்கப்பட்டிருந்தமை.

(iii) நிலவுள்ள சந்தியின் இடது பக்கத்திலுள்ள வீதிக்கு அருகில் மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக விண்ணப்ப பத்திரத்திற்குரிய எந்தவொரு பகுதியும் பூர்த்தி செய்யப்படாது தரச்சான்றிதழ் விநியோகிப்பதற்காக சபை செயலாளரால் பரிந்துரை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட சகல விடயங்களையும் மீறி மொத்த நிலமும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டமை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### தீர்த்து வைக்கப்படாத சபையின் ஆதனங்கள்

சபைக்குரிய அசைவுறாத 17 ஆதனங்களுக்காக உரித்துறுதி / கையளித்தல் உறுதி சபையிடம் காணப்படாதிருந்ததுடன் அந்த ஆதனங்களின் உரித்தை தீர்த்து வைப்பதற்கும், அளவுகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உள்ளூராட்சி நிறுவனம் உரித்துக்கோருகின்ற அரசாங்கத்தின் காணிகளுக்கான கையளித்தல் கட்டளை தொடர்பாக மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட 2010 செப்தெம்பர் 20 ஆந் திகதிய LGD/06/B/02 ஆம் இலக்க கடிதம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைகள்

#### 3.4.1 வழங்கல் மற்றும் சேவை

2017 ஏப்ரல் 04 முதல் 2018 ஏப்ரல் 04 வரை சபைக்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பு கம்பனிக்கு 03 நாட்களின் பின்னர் பாதுகாப்பு சேவை வழங்குவதற்கு முடியாததாகக் காண்பிக்கப்பட்ட போதும், உடன்படிக்கையின் பிரகாரம் பெறவேண்டிய ரூபா 250,000 பெறுமதியான வங்கிப் பிணை பெறப்படாமையினால் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. பின்னர் தெரிவு செய்யப்பட்ட தனியார் கம்பனி பாதுகாப்பு சேவை வழங்கும் போது உடன்படிக்கையின் 17(அ) இன் பிரகாரம் அந்தந்த இடங்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உரிய பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) கபால கந்த வீதிக்கு (வைத்தியசாலை வீதி) 120 அடிக்கு கல் இட்டு தார் இடுவதற்கு ரூபா 247,794 தொகை செலவில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் மதிப்பீட்டைத் தயாரித்தல், நிதிஏற்பாட்டை அங்கீகரித்தல், கூறுவிலை கோரல், உடன்படிக்கை கைச்சாத்திடல், வேலைகளை நிறைவேற்றுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் போன்ற சகல விடயங்களுக்கும் கபால் கந்த வீதி (வைத்தியசாலை வீதி) என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும் 2017 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த வீதிப் பகுதியைக் காண்பிப்பதற்கு சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தவறியிருந்ததுடன் அதற்குப் பதிலாக அபிவிருத்தி செய்யப்பட்ட வேறொரு வீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வேவல சாந்த வீதியின் உப வீதி, கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 391,991 தொகையில் 01 மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு 2011 நவம்பர் 09 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு 2011 திசெம்பர் 23 ஆந் திகதி ரூபா 305,615 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த கொங்கிறீட் இடுதல் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன் செய்யப்பட்டிருந்தது. மேலும், கொங்கிறீட் இடுவதற்கு எதிராக இந்த வீதி தொடர்பான நில வரைபடத்தின் 07 ஆம் இலக்க பகுதியின் உரிமையாளர்களிடமிருந்து காணியின் பகுதியை நகர சபையினால் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டதாக தெரிவித்து 2011 ஒக்தோபர் 04 ஆந் திகதி நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்தது. உரிமையாளர் வீதிக்கு குறுக்காக தூண்கள் நட்டமையினால் நகர சபையினாலும் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டு சட்டத்தரணிக் கட்டணமாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 35,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) கம்பஹா மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 ஏப்ரல் 18 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த வீதி நகர சபைக்குச் சொந்தமில்லாதது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் நிலவரைபட இலக்கம் 07 இன் பகுதியில் வீதியின் எல்லையில் உள்ள கொங்கிறீட் பகுதியை உடைத்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் சபைக்கு கவனத்தில் கொள்ளக்கூடிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான முகாமைத்துவம் | கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் இன்றி ஆதனவரி பதிவழித்தல் இடம்பெற்றமை. |
| (ஆ) | கணக்கீடு | கணக்கு மீதிகளில் வேறுபாடுகள் காணப்பட்டமை |
| (இ) | அனுமதியற்ற நிர்மாணம் | அனுமதியற்ற நிர்மாணங்களை சட்டரீதியாக்குதல். |
| (ஈ) | சொத்துக் கட்டுப்பாடு | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |